ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2316/38 - 2023 ජනවාරි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.26
2316/38 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்
### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KDS/KGK/4/2/(4)/2019/02/03.
காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/18/2019/WS/ 604.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவில், குருதெனிய வடக்கு (278) கிராம அலுவலர் பிரிவில், கிரிமெட்டிய கிராமத்தில் அமைந்த, நில அளவை நாயகத்தின் சார்பாக கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் 2022.12.30 ஆந் திகதியிடப்பட்டு அளந்து தயாரிக்கப்பட்டுள்ள C.M. 320301 இல் 05 ஆம் வலயத்தில் இலக்கம் 27 ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 01 சுமார் 0.1299 ஹெக்டயார் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணிப்பகுதி ஒன்றின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**
காணியின் பெயர்: செட்டிகேவத்த; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: டபிள்யூ. ஜி. யூ. ஆர். சில்வா; விஸ்தீரணம்: 0.1299 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர்

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்டகோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்டகோரளை.
2023, சனவரி 19.

EOG 01 - 0238

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: NPC/LND/ACQSN/16/1/1-II.
காணி அமைச்சின் இல.: 4-3/11/2017/NPPD/360-II.

2021.05.04 ஆந் திகதிய இல. 2226/19 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்துக்கொள்ளல் சட்டத்தின் 7ஆவது பிரிவிற்கு அமைவாக வெளியிடப்பட்ட காணி விபரங்களில் 8A பக்கத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் தொடர் இலக்கம் 70 இன் கீழ் குறிப்பிடப்பட்ட துண்டு இலக்கம் 193 இல் காணியின் அளவு '0.01881' என்பது 'ஹெக்டயார் 0.1881' எனவும், தெற்கு எல்லை 'துண்டு இலக்கம் 246 மற்றும் 242' என்பது 'துண்டு இலக்கம் 246,245 மற்றும் 242' எனவும் சரி செய்யப்பட வேண்டும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எம். ஜீ. சேனாரத்ன,
பிரதேச செயலாளர்,
மத்திய நுவரகம் பலாத்த.

பிரதேச செயலகம்,
மத்திய நுவரகம் பலாத்த.
2023, சனவரி 24.

EOG 01 - 0239

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.